அசல்

19.4.39 சுத்தானந்தபாரதி

அசல் -1 நகல் -1

AUM

2910

Swami Shuddhananda Bharati
Sri Aurobindo Ashram

PONDICHERRY (S. INDIA)

19 4 39

செந்தமிழ்க் கற்பகமே வந்தனம்...அன்பு, அன்பு, வணக்கம், வணக்கம்!

ஆசிமணக்கும் தென்றல் வந்தது; இது எளியேன் புரியும் எள்ளளவு பணிக்கும் ஒரு புத்துயிரீந்தது. தங்கள் மனம் உவந்தால் தமிழன்னையின் மனம் உவந்ததென நான் எப்போதும் நினைப்பதுண்டு.

தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழே உயிர்ப்பாகக்கொண்டு, தமிழருக்காகவே வாழும், தமிழேயான தங்கள் பெருமையைவியக்காதநாளில்லை.

மஹாகவிகாளிதாஸனின் மேகதூதம், அஜன்வரலாறு, விக்ரமோர்வசியம், மாளவிகாக்னிமித்திரம் முதலியவற்றினின்றும் தேர்ந்தெடுத்த 100 பாக்கள் வெளியிட நினைத்தது. இடமில்லை. அவை 'ஆரியப்பூங்கா' என்னும் நூலில் வரும். அருளமுதத்திற்குப்பிறகு அந்நூல் வெளிவரும். அருளமுதத்தைப்பற்றி முன்பே தெரிவித்துள்ளேன்.

நிற்க 'சிலம்புச் செல்வம்' அச்சில் உள்ளது. சென்ற இரண்டாண்டுகளாக மும்மொழிகளிலும் பன்னூல்களை ஆராய்ந்து, இந்நூல், இயன்றவரை, சிலப்பதிகாரத்திற்கு ஒரு துணைநூலாகவேண்டுமென்ற முயன்றிருக்கிறேன். இந்நூலைப்படித்தவர் மூலத்தை ஆர்வமுடன் வாங்கி எளிதாகப்பயில இயலும்.

சிலம்புச்செல்வத்தில் தங்கள் கைவண்ணத்தை நாட்டி மனப்பூர்வமான ஆசிமொழியுதவவேண்டும். நூலைத் தங்களுக்கே அர்ப்பணிக்க சங்கற்பம் செய்தாயிற்று. தங்கள் மனத்திற்குப்பிடித்த உருவப்படம் வேண்டும். தங்கள் கையெழுத்துடன் படக்கட்டை செய்து அச்சிடுவார்கள். படத்திற்கு எதிரே தங்கள் வரலாறு விளங்கவேண்டும். தங்கள் அருகேயிருந்து தமிழ்ப்பணிபுரியும் பெரும்பேறுபெற்ற வித்துவான் ஸ்ரீ கி.வா.ஜகந்நாத ஐயர் தங்கள் வரலாற்றுச்சுருக்கத்தை எழுதியுதவினால் நல்லது. அதில் தாங்கள் சிலப்பதிகாரம் வெளியிடச் செய்த முயற்சி விரிவாகக் காணலாம். அடுத்தவாரம் இதற்காகவே அன்புநிலயம் அமைச்சர் திரு. அண்ணாமலை தங்களைத்தரிசிக்க எனது எளிய காணிக்கையைக்கொண்டு வருவார். படத்தைத் தங்கள் திருக்கரத்தாலேயே பெற்றுக்கொண்டு, உடனே அச்சிட முயலுவார். சிலம்புச்செல்வத்திற்குத் தங்கள் முழுமையான ஆசீர்வாதம் கிடைக்கவேண்டும். அச்சிட்ட பக்கங்கள் தங்களுக்கு வந்துகொண்டிருக்கும்.

தங்கள் அனுபவச்சுரங்கத்தினின்றும் வெளிப்படும் கதைமணிகள் என்னைத் திக்கிடச் செய்கின்றன. தங்கள் அனுபவகதாசரித்ஸாகரத்தில் இன்பநீராடுகிறேன். கதையுலகிற்கே தாங்கள் ஒரு புதியவழிகாட்டுகிறீர்கள். தங்கள் சுயசரிதம் வெளிவரும் நாளை ஆவலாக எதிர்பார்க்கிறேன். தங்களை நினைந்து நினைந்து ...

போற்றும் அன்பன்... சுத்தானந்தபாரதி

நகல்

ஸ்ரீ அரபிந்தா...

பாண்டிச்சேரி

19. 4. 39

செந்தமிழ் கற்பகமே வந்தனம். ... அன்பு. அன்பு. வணக்கம் வணக்கம்

ஆசிமணக்கும் தென்றல் வந்தது எளியேன் புரியும் எள்ளளவு பணிக்கும் ஒரு புத்துயிர் தந்தது தங்கள் மனம் உவந்தால் தமிழன்னையின் மனம் உவ... என நான் எப்போதும் நினைப்பதுண்டு

தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழே உயிர்ப்பாகக் கொண்டு தமிழுக்காகவே வாழும் தமிழேயான தங்கள் பெருமையை வியக்காத நாளில்லை

மஹாகவி காளிதாஸனின் மேகதூதம், அஜன் வரலாறு, ரமோர்வசீயம், மாளவிகாக்னிமித்திரம் முதலியவற்றின் தேர்ந்தெடுத்த 100 பாக்கள் வெளியிட நினைத்தது இடமில்லை அவை ஆரியப்பூங்கா என்னும் நூலில் வரும் அருளமுதத்திற்குப்பிறகு அந்நூல் வெளிவரும் அருளமுதத்தைப் பற்றி முன்பே தெரிவித்துள்ளேன்

இப்போது "சிலம்புச் செல்வம்" அச்சிலுள்ளது சென்ற இரண்டாண்டுகளாக மும்மொழிகளிலும் பன்னூல்களை யாராய்ந்து இந்நூல் இயன்றவரை சிலப்பதிகாரத்திற்கு ஒரு துணைநூலாக வேண்டுமென்று முயன்றிருக்கிறேன் இந்நூலைப்படித்தவர் மூலத்தை ஆர்வமுடன் வாங்கி எளிதாகப் பயில இயலும். சிலம்புச்செல்வத்தில் தங்கள் எண்ணத்தை நாட்டி மனப்பூர்வமான ஆசிமொழியுதவ வேண்டும். நூலைத்தங்களுக்கே அர்ப்பணிக்க சங்கற்பம் செய்தாயிற்று. தங்கள் மனத்திற்குப் பிடித்த ஒரு உருவப்படம் வேண்டும். தங்கள் கையெழுத்துடன் படக்கட்டை செய்து அச்சிடுவார்கள். படத்திற்குக் கீழே தங்கள் வரலாறு விளங்க வேண்டும் தங்கள் அருகேயிருந்து தமிழ்ப்பணிபுரியும் பெரும்பேறு பெற்ற வித்துவான். கி.வா. ஜகந்நாதையர் தங்கள் வரலாற்றுச் சுருக்கத்தை எழுதியுதவினால் நல்லது அதில் தாங்கள் சிலப்பதிகாரம் வெளியிடச் செய்த முயற்சி விரிவாகக் காணலாம் அடுத்த வாரம் இதற்காகவே அன்புநிலையம் அமைச்சர் திரு. அண்ணாமலை தங்களைத் தரிசிக்க எனது எளிய காணிக்கையைக் கொண்டு வருவார். படத்தைத் தங்கள் திருக்கரத்தாலேயே ஈந்து கொண்டு உடனே அச்சிட முயலுவார்.

சிலம்புச் செல்வத்திற்கு தங்கள் செழுமையான ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் அச்சிட்ட பக்கங்கள் தங்கட்கு வந்து கொண்டிருக்கும். தங்கள் அனுபவச் சுரங்கத்தினின்றும் வெளிப்படும் கதை மணிகள் என்னைத் திக்கிடச் செய்கின்றன தங்கள் அனுபவ கதாஸரித் ஸாகரத்தில் இன்பநீராடுகிறேன் கதையுலகிற்கே தாங்கள் ஒரு புதிய வழிகாட்டுகிறீர்கள் தங்கள் சுயசரிதம் வெளிவரும் நாளை ஆவலாக எதிர்பார்க்கிறேன். தங்களை நினைந்து நினைந்து வியந்து போற்றும் அன்பன் - - .

சுத்தானந்த பாரதி

நகல்

19. 4. 39

சுத்தானந்த பாரதி
பாண்டிச்சேரி

Swami Shuddhananda Bharati
Sri Aurobindo Ashram
Pondicherry. (S india)

Pages 249 – 251

த. க. VOL 'K'
copied.